ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2176/6 - 2020 මැයි මස 19 වැනි අඟහරුවාදා - 2020.05.19

*2176/6 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *(203 ஆம் அதிகாரமான) மோட்டார் வாகனச் சட்டம்*

*(203 ஆம் அதிகாரமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய, அச்சட்டத்தின் 126 ஆம் பந்தியின் கீழான, போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சரினால் விடுக்கப்பட்ட கட்டளை.*

**மகிந்த அமரவீர,**
போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சர்.

கொழும்பு,
*2020, மே 13.*

**கட்டளை**

*1.* இந்தக் கட்டளையானது 2020 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க மோட்டார் வாகன (சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலத்தை தற்காலிகமாக நீடித்தல்) கட்டளை என அறியப்படுவதுடன், 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் வலுவிலிருக்கும் எனவும் செயல்வலுப் பெறும் எனவும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

*2.* மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டு, 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதி வரை செல்லுபடியாகி, அன்றைய திகதியில் முடிவடைகின்ற அனைத்து சாரதி அனுமதிப்பத்திரத்தினதும் செல்லுபடியான காலப்பகுதியானது, 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

*05-36*

1A - G 32248 — 42 (2020/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*